**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 4 August 2017

# ஐந்தாண்டுகளில் ஆக அதிகமான மாணவர் சேர்க்கை

யேல்–சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக கல்லூரியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆக அதிகமாக, மாணவர்கள் சேர்க்கை 248ஆக இந்த ஆண்டு உயர்ந்துள்ளது.

அமெரிக்க யேல் ஐவி லீக் பல்கலைக்கழகமும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் கல்லூரியில் இவ்வாண்டு சிங்கப்பூர் மாணவரின் எண்ணிக்கை மற்ற நாட்டு மாணவர்களின் எண்ணிக்கையைவிட கூடுதலாக உள்ளது என்று கல்லூரி கூறியுள்ளது.

இக்கல்லூரியில் சிங்கப்பூரின் பலதுறை தொழில்நுட்ப கல்லூரியையும் சேர்த்து 28 பள்ளிகளில் இருந்து மொத்தம் 129 சிங்கப்பூரர்கள் இவ்வாண்டு சேர்ந்துள்ளார்கள். யேல்–என்யுஎஸ்சின் பாடத்திட்டம் கலை, மனிதநேயம், சமூகம், இயற்கை அறிவியலை சார்ந்து வடிவமைக்கப்பட்டுள்ளதால் மாணவர்களிடையே பல்முனை கற்றலை அது ஊக்குவிக்கிறது.

ஜூலை மாத ஆய்வின்படி இக்கல்லூரியின் 119 பட்டதாரிகளில் 74 விழுக்காடு மாணவர்கள் படிப்பைத் தொடருவதற்காக பல்கலைக்கழகத்திலோ அல்லது நிரந்தரப் பணிகளிலோ உள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.